1973 நவம்பர் 22]

சுருட்டுத் தொழிலாளர்களுக்கு ஊதியம்.

*** 241 வினா—திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுதுமுள்ள சுருட்டு தொழிலாளர்களுக்கு ஒரே சீரான கூலி வழங்கப்படுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) பீடி, சுருட்டு தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு கூலியை நிர்ணயிக்க அமைக்கப்பட்ட குழு அதன் அறிக்கையை சமர்ப்பித்து அதனை ஆணையாக ஜூன் 1973-ல் அரசு உத்திர விட்டுள்ளது. 1973 ஜூலை முதல் நாளிலிருந்து அக்குறைந்த பட்ச கூலி அமுலில் இருக்கிறது.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, இப்போது கூட கும்பகோணத்தில் ஒரு கூலியும், நாகப்பட்டினத்தில் ஒரு கூலியும், மாயூரத்தில் ஒரு கூலியும் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படிப்பட்ட அறிக்கைகள் ஏதும் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் கேள்வி நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

Provident Fund, etc., benefits for workers in beedi industry

* 242 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the States Labour Ministers' Conference held at Mysore in 1972 has recommended for the introduction of Provident Fund, Gratuity and Employees State Insurance benefits to the beedi workers; and

(*b*) if so, the action taken thereon?